# தகவல் கொத்து

# Information Booklet

# 2020

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

**Wentworthville Tamil Study Centre Inc.**

**www.wtsc.org.au**

பாடசாலை நடைபெறுமிடம்: Girraween Public School
9 Bando Road, Girraween NSW 2145

பாடசாலை நேரம்:

| வகுப்பு | நாள் | ஆரம்பம் | முடிவு |
|---|---|---|---|
| பாலர்பள்ளி, முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி | சனிக்கிழமை | பி.ப 2.00 | பி.ப 4.20 |
| ஆண்டு 1 முதல் ஆண்டு 9 வரை | சனிக்கிழமை | பி.ப 2.00 | பி.ப 4.30 |
| ஆண்டு 9 HSC | சனிக்கிழமை | பி.ப 2.00 | பி.ப 5.00 |
| ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC வரை | சனிக்கிழமை | பி.ப 1.30 | பி.ப 5.30 |
| ஆண்டு 12 HSC | வியாழக்கிழமை | பி.ப 7.00 | பி.ப 9.00 |
| ஒன்றுகூடல் | சனிக்கிழமை | பி.ப 3.00 | பி.ப 3.15 |
| இடைவேளை | சனிக்கிழமை | பி.ப 3.15 | பி.ப 3.30 |

கீழ்ப்பிரிவு வகுப்புக்கள்: பாலர் பள்ளி, முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 5 வரை
மேற்பிரிவு வகுப்புக்கள்: ஆண்டு 6 முதல் ஆண்டு 9 வரை, புகுநிலை, இணைப்பு வகுப்புக்கள் மற்றும் ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 12 HSC வரை

தபால் தொடர்புகட்கு: Wentworthville Tamil Study Centre Inc.
PO Box 557
Wentworthville NSW 2145

மின் அஞ்சல் தொடர்புகட்கு: info@wtsc.org.au

இணையத்தளம்: www.wtsc.org.au

கைப்பேசி செயலி: Schoolzine Szapp

முகப்புத்தகம்: www.facebook/tamilstudy

**முக்கிய திகதிகள்:**

1ம் தவணை: 01.02.2020 முதல் 04.04.2020 வரை

2ம் தவணை: 02.05.2020 முதல் 04.07.2020 வரை

3ம் தவணை: 25.07.2020 முதல் 26.09.2020 வரை

4ம் தவணை: 17.10.2020 முதல் 19.12.2020 வரை

வகுப்பு புகைப்படம் எடுத்தல்: 15.08.2020

கலைவிழா: 12.09.2020

வருடாந்த பரிசளிப்பு விழாவும் இராப்போசனமும் மற்றும் வருடாந்தபொதுக்கூட்டம்: 07.12.2019

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

-மகாகவி சுப்பிரமணிய பாரதி

## ADVANCE AUSTRALIA FAIR

Australians all let us rejoice,
For we are young and free;
We've golden soil and wealth for toil;
Our home is girt by sea;
Our land abounds in nature's gifts
Of beauty rich and rare;
In history's page, let every stage
Advance Australia Fair,
In joyful strains then let us sing,
Advance Australia fair.

Beneath our radiant Southern Cross
We'll toil with hearts and hands,
To make this commonwealth of ours
Renowned of all the lands;
For those who've come across the seas
We've boundless plains to share;
With courage let us all combine
To Advance Australia fair;
In joyful strains then let us sing,
Advance Australia fair.

- Peter Dodds McCormick

# பாடசாலைக் கீதம்

வாழ்க வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் வாழிய வாழியவே
வாழ்க தமிழ் அன்னை ஆழிசூழ் உலகெலாம் வாழிய வாழியவே

செம்மை முறை வழி செந்தமிழ்ப் பள்ளியைச் சேர்ந்து வளர்த்திடுவோம்
எம்மையும் ஆதரித்தின் தமிழ் பயிற்றிடும் ஈடில்லா நிலையமிதே

ஈரமும் மானமும் வீரமும் போற்றுவம் இறைவனைத் தினந்துதிப்போம்
ஈகையில் வாய்மையில் அடக்கம் உயர் பண்பில் என்றுமே உயர்ந்திடுவோம்

அன்பைப் பொழிந்தென்றும் ஒற்றுமை பேணியே அருங்கலை கற்றிடுவோம்
இன்பத் தமிழ்ப் பள்ளி இனிது துலங்கிட எம்மையே அர்ப்பணிப்போம்

சங்கத் தமிழ் என்றும் மங்காப் புகழுடன் தரணியில் ஓங்கிடவே
எங்கும் தமிழ் மொழி எதிலும் தமிழ் மணம் எழிலுடன் வாழியவே!

| பதிப்புகள்: | Editions: |
|---|---|
| முதற்பதிப்பு தை 1999 | First Edition January 1999 |
| இரண்டாம் பதிப்பு தை 2003 | Second Edition January 2003 |
| மூன்றாம் பதிப்பு தை 2004 | Third Edition January 2004 |
| நான்காம் பதிப்பு மாசி 2005 | Fourth Edition February 2005 |
| ஐந்தாம் பதிப்பு தை 2006 | Fifth Edition January 2006 |
| ஆறாம் பதிப்பு மாசி 2007 | Sixth Edition February 2007 |
| ஏழாம் பதிப்பு தை 2008 | Seventh Edition January 2008 |
| எட்டாம் பதிப்பு தை 2009 | Eight Edition January 2009 |
| ஒன்பதாம் பதிப்பு தை 2010 | Ninth Edition January 2010 |
| பத்தாம் பதிப்பு தை 2011 | Tenth Edition January 2011 |
| பதினோராம் பதிப்பு தை 2012 | Eleventh Edition January 2012 |
| பன்னிரண்டாம் பதிப்பு தை 2013 | Twelfth Edition January 2013 |
| பதின்மூன்றாம் பதிப்பு தை 2014 | Thirteenth Edition January 2014 |
| பதின்நான்காம் பதிப்பு தை 2015 | Fourteenth Edition January 2015 |
| பதினைந்தாம் பதிப்பு தை 2016 | Fifteenth Edition January 2016 |
| பதினாறாம் பதிப்பு ஆனி 2016 | Sixteenth Edition June 2016 |
| பதினேழாம் பதிப்பு ஆனி 2017 | Seventeenth Edition June 2017 |
| பதினெட்டாம் பதிப்பு தை 2018 | Eighteenth Edition January 2018 |
| பத்தொன்பதாம் பதிப்பு பங்குனி 2019 | Nineteenth Edition March 2019 |
| இருபதாம் பதிப்பு பங்குனி 2020 | Twentieth Edition March 2020 |



| பதிப்பக உரிமையாளர்: | Publication rights to: |
|---|---|
| வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் | Wentworthville Tamil Study Centre Inc. |
| த. பெ. இல 557 | PO Box 557 |
| வென்றுவேத்வில் | Wentworthville |
| நியூ சவுத் வேல்ஸ் 2145 | New South Wales 2145 |
| அவுஸ்திரேலியா | Australia |


அன்பான பெற்றோர்களே,

இந்த வெளியீடு கடந்த கால மற்றும் தற்காலச் செயற்குழுவினரின் முயற்சியினால் உருவாக்கப்பட்டது.

இது பாடசாலையின் அன்றாட மற்றும் விசேட நடவடிக்கைகளைப் பெற்றோர் பாதுகாவலருக்கு விளக்கும் நோக்கத்துடனும் அவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அறியத்தரும் நோக்குடனும் தயாரித்து வழங்கப்படுகிறது.

இதில் ஏதாவது திருத்தங்களோ அல்லது மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள், தகவல்களோ இருப்பதாகப் பெற்றோர் கருதினால் அதை செயற்குழுவினரின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.
செயற்குழு,
வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

# வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

# செயற்குழு – 2020

| பதவி | பெயர் |
|---|---|
| தலைவர் | திரு. நந்தகுமாரன் கணபதிப்பிள்ளை |
| உப தலைவர் | திரு. ரமணன் உருத்திரமூர்த்தி |
| உப தலைவர் | திரு. கமலேஸ்வரன் சோமசுந்தரம் |
| செயலாளர் | திரு. வரதன் திருஞானமூர்த்தி |
| உப செயலாளர் | திரு. தயானந்தன் சிதம்பரநாதன் |
| உப செயலாளர் | திரு. ஹேமா சிங்கம் |
| பொருளாளர் | திரு. சிவரூபன் திருஞானம் |
| உப பொருளாளர் | திரு. ஜோசுவா சத்தியன் ஜெபராஜா |
| உப பொருளாளர் | திருமதி. ஜனனி சேருபன் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. நகுலேஸ்வரராஜா ராசையா |
| செயற்குழு உறுப்பினர் | திருமதி. சந்திரவதனா சிதம்பரநாதன் |
| செயற்குழு உறுப்பினர் | திருமதி. நிரஞ்சனா சிறீரங்கநாதன் |
| செயற்குழு உறுப்பினர் | திருமதி. வினோதா துஷ்யந்தன் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. ஜோர்ஜ் தனராஜா பெஞ்சமின் |
| செயற்குழு உறுப்பினர் | திரு. ஜேம்ஸ் ஜோசப் |
| அதிபர் | திரு. அலோசியஸ் ஜெயமன்னன் ஜெயச்சந்திரா |
| உப அதிபர் மேற்பிரிவு | திரு. அருண்மொழித்தேவர் தியாகராஜா |
| உப அதிபர் கீழ்ப்பிரிவு | திரு. சுதாகரன் தவரட்ணராஜா |
| உப அதிபர் கீழ்ப்பிரிவு | செல்வி புராதனி கிருபாகரன் |

இவ்வாண்டுக்கான கருப்பொருள்

## ‘முத்தமிழ் வளர்க்க முன்னின்றுழைப்போம்’

*“இப்பாடசாலையானது பெற்றோர்கள், தொண்டர் ஆசிரியர்கள், நலன் விரும்பிகளினால் நடாத்தப்படுகின்றது. இப்பாடசாலையில் உங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதன் மூலம் நீங்களும் பாடசாலையின் அங்கத்தவர்கள் ஆவதுடன் மட்டுமல்லாது பங்காளிகளாகவும் ஆகின்றீர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.”*

## எமது பாடசாலை

வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையமானது, 1988ம் ஆண்டு புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் மொழிக்கல்வியுடன் தமிழர் பாரம்பரியங்கள் மற்றும் கலை கலாசாரங்களையும் புகட்டும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நடப்பு வருடத்தின் ஆடி 31ம் திகதி அன்று (July 31st)மூன்று அல்லது அதற்கும் கூடிய வயதை எய்தும் சிறார்கள் அனைவரும் பாடசாலையில் சேர்வதற்கு தகுதி உடையவராவர். பாலர்பள்ளிமுதல் உயர்தரம் வரை தற்போது எமது பாடசாலையில் 810 மாணவர்கள் தமிழ் கற்கின்றார்கள். 2010ம்ஆண்டு முதல் நியூ சவுத் வேல்ஸ் (NSW) மாநில உயர்தரப் பரீட்சையில் பல மாணவர்கள் எமது பாடசாலையில் இருந்து தமிழ்ப் பாடத்தில் தோற்றுகிறார்கள். இவர்களது சிறந்த பெறுபேறுகள் எமது பாடசாலையின் கல்வித் தரத்திற்கு சான்று பகர்கின்றன.

பெற்றோர்கள் அங்கம் வகிக்கும் நிர்வாகக் குழுவானது பாடசாலை நிர்வாகத்தைச் சிறப்புற நடாத்துகின்றது. எமது சமுதாயத்தின் தமிழ்க் கல்வியாளர்களும், தமிழ் ஆர்வலர்களும் தன்னார்வத் தொண்டர்களாகத் தமிழ் கற்பிக்கின்றார்கள். பெற்றோரும் மற்றுமுள தமிழ் பற்றாளர்களும் பாடசாலையின் பல்வேறு நடவடிக்கைகளிற்கு உதவுகின்றார்கள். இவர்கள் எல்லோருடைய அயராத தமிழ்ப் பணியினால் பாடசாலை தொடர்ந்து தமிழ்ப் பணியினை செவ்வனே செய்துவருகின்றது.

இப்பாடசாலையில் சிறார்களுக்கு தமிழ் மொழியைப் பேச, எழுத, வாசிக்கக் கற்பிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவர்கள் சபை முன் தமிழில் பேசுவதற்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. மாணவர்கள் தமிழ் மொழியில் பேசும் ஆற்றலை ஊக்குவிக்கும் முகமாக இரண்டாம் தவணை ஆரம்பத்தில் பேச்சுப் போட்டியின் ஒரு கூறாக வாய்மொழித் தொடர்பாடல் போட்டியும் நடாத்தப்படுகின்றது. மாணவர்களின் தமிழ் அறிவை மேம்படுத்துவதற்காக மூன்றாம் தவணையில் தமிழ் அறிவுப் (வினாவிடை) போட்டிகள் நடாத்தப்படுகின்றன. எமது இணையத் தளத்தில் உள்ள பாடசாலை நாட்காட்டியில் இப்போட்டிகள் நடைபெறும் திகதிகளைப் பார்வையிடலாம்.

இத்துடன் மூன்றாம் தவணையின் நடுப்பகுதியில் நடாத்தப்படும் கலைவிழா நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து பங்குபற்ற வைப்பதன் மூலம் மாணவர்களின் முத்தமிழ் (இயல், இசை, நாடகம்) அறிவும், திறனும் வளர்க்கப்படுகின்றன. இவை தவிர மாணவர்களின் கற்கும் ஆற்றலை ஊக்குவிக்குமுகமாக வகுப்பு மற்றும் வீட்டு வேலைகள் மூலம் மாணவர்களது எழுத்து மற்றும் வாசிப்புத் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

மாணவர்களின் கற்கும் ஆற்றலையும் ஆளுமையையும் ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் பேச்சுப் போட்டிகளிலும், வாய்மொழித் தொடர்பாடல் போட்டிகளிலும், தமிழ் அறிவுப் (வினாவிடை) போட்டிகளிலும், எழுத்து மற்றும் வாசிப்பு மதிப்பீடுகளிலும் பங்குபற்றும் மாணவர்களுக்கு வருட இறுதியில் நடைபெறும் வருடாந்தப் பொதுக்கூட்டம் மற்றும் இராப்போசன விருந்து என்பவற்றோடு கூடிய பரிசளிப்பு விழாவில் பரிசுக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு வாரமும் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து தமிழ் கற்பதை ஊக்குவிக்கும் முகமாக, நூறு சதவீத வரவிற்கு பரிசளிப்பு விழாவில் சிறப்புச் சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்படுகின்றன.

## பாடசாலை வரலாறு

வென்றவேத்வில் தமிழ் கல்வி நிலையமானது 1988ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நியூ சவுத்வேல்ஸ் பாடசாலைத் தவணைகளில் வரும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை வென்றவேத்வில் டார்சி வீதி ஆரம்பப் பாடசாலையில் (Darcy Road Public School, 130 Darcy Road, Wentworthville)1988ம்ஆண்டு முதல் 2003ம் ஆண்டு வரை நடைபெற்று வந்தது.
2004ம்ஆண்டு, இக்கல்வி நிலையமானது, வென்றவேத்வில் டார்சி வீதி ஆரம்பப் பாடசாலையில் (Darcy Road Public School, 130 Darcy Road, Wentworthville) இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது. முதலாம் பிரிவுக்கு பிற்பகல் 1:00 மணி முதல் 3:15 மணி வரையும், இரண்டாம் பிரிவுக்கு பிற்பகல் 3:00 மணி முதல் 5:30 மணி வரையும் வகுப்புகள் நடைபெற்றன.

2005ம் வருடத்திலிருந்து 2010ம் வருடம் வரை இக்கல்வி நிலையமானது, இரண்டு வளாகங்களாக வென்றவேத்வில் டார்சி வீதி ஆரம்பப் பாடசாலையிலும் (Darcy Road Public School, 130 Darcy Road, Wentworthville) கிரவின் ஆரம்பப் பாடசாலையிலும் (Girraween Public School, 9 Bando Road, Girraween)நடைபெற்றது. இரு பாடசாலைகளிலும் நியூ சவுத்வேல்ஸ் பாடசாலை வாரங்களின் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை தமிழ் வகுப்புகள் நடைபெற்றன.

2011ம் வருடத்தில் இருந்து இக்கல்வி நிலையமானது,இரு பிரிவுகளாக கீழ் வகுப்புகள் (இணைப்பு வகுப்பு உட்பட முன்பள்ளியிலிருந்து நான்காம் வகுப்புவரையுள்ள வகுப்புக்கள்),மேல் வகுப்புகள் (புகுநிலை வகுப்பு உட்பட ஐந்தாம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களும்) என கிரவின் ஆரம்பப் பாடசாலையில் (Girraween Public School, 9 Bando Road, Girraween, NSW 2145)இயங்கி வருகின்றது.

2016ம் வருடத்தில் இருந்து நடப்பு வருடத்தின் ஆடி 31ம் திகதி அன்று (July 31st) மூன்று அல்லது அதற்கும் கூடிய வயதை எய்தும் மாணவர்களுக்காக பாலர் பள்ளி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நியூ சவுத்வேல்ஸ் பாடசாலை வாரங்களில் வரும் சனிக்கிழமைகளில் பாலர்பள்ளி, முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவர்களிற்குப் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:20 மணி வரையும் ஆண்டு 1 முதல் ஆண்டு 9 வரை மாணவர்களிற்குப் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரையும் ஆண்டு 9 HSC மாணவர்களிற்கு 2:00 மணி தொடக்கம் 5:00 மணி வரையும் ஆண்டு 10 HSC முதல் ஆண்டு12 HSC வரை மாணவர்களிற்குப் பிற்பகல் 1:30 மணி தொடக்கம் 5:30 மணி வரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உயர்தரப் பரீட்சைக்குத் (HSC) தமிழை ஒரு பாடமாகத் தோற்ற இருக்கும் மாணவர்களிற்குப் (ஆண்டு 12 HSC) பாடசாலை வாரங்களின் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணி தொடக்கம் 5:30 மணி வரையும் வியாழக்கிழமைகளில் மாலை 7.00 மணிதொடக்கம் 9.00 மணி வரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

## பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல்

மாணவர்களை வருட ஆரம்பத்தில் பாடசாலையில் சேர்ப்பது பெரிதும் வரவேற்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதன் மூலம் மாணவர்கள் பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களை இலகுவாக ஆரம்பத்திலிருந்தே கற்கக்கூடியதாகவும் சக மாணவர்களுடன் நன்கு அறிமுகம் செய்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும். இது பாடசாலையை இடையூறின்றி சிறப்பாக நடாத்த உதவுவதுடன் தங்கள் பிள்ளை சார்பான அரச மானியத்தையும் பாடசாலை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பரிசில்களைத் தீர்மானிப்பதற்கு மாணவர் வரவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது (மேலதிக விபரங்களைப் போட்டி விதிமுறைகளின் கீழ்க் காணலாம்). அத்துடன் பாடசாலையின் கலைவிழாவில் பங்கேற்பதற்கும் பாடசாலை வரவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்பதால் பெற்றோர்கள் மாணவர்களின் வரவில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## மாணவர்களின் வயது எல்லை

நடப்பு வருடத்தின் ஆடி 31ம் திகதி அன்று (July 31st)மூன்று அல்லது அதற்கும் கூடிய வயதை எய்தும் சிறார்கள் அனைவரும் பாடசாலையில் சேர்ந்துகொள்ளத் தகுதி உடையவராவர்.

## மாணவர்களின் வகுப்பு

பாடசாலையில் சேரும்போது மாணவரின் வயது மற்றும் தமிழ் மொழி அறிவு மதிப்பீடு என்பவற்றிற்கு ஏற்ப தகுந்த வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர். மாணவர்களின் தமிழ் மொழித்திறன் அவர்களது வயதுப் பிரிவினிலும் குறைவாக இருந்தால் அவர்கள் இணைப்பு வகுப்பு மற்றும் புகுநிலை வகுப்பு ஆகியவற்றில் சேர்க்கப்பட்டு தனிப்பட்ட கவனத்துடன் விசேட பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் அவர்களது வயதுப் பிரிவினரின் வகுப்புகளிற் சேர்க்கப்படுவர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வகுப்பு மாற்றம் தொடர்பாக அதிபரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கலாம்.

## பாடப்புத்தகங்கள்

பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் என்பன எமது கல்வி நிலையத்தினால் வழங்கப்படும். இந்நூல்கள் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும். பாடசாலைக்கு வரும்போது மாணவர்கள் பாடசாலையினால் வழங்கப்பட்ட புத்தகங்களுடன் அப்பியாசப்புத்தகம், எழுது கருவிகள் என்பவற்றோடு வகுப்பு ஆசிரியர் குறிப்பிடும் உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும்.பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் தொலையுமிடத்து அதற்கு மாற்றீடாக வழங்கப்படும் புத்தகங்களுக்கு தலா $10 அறவிடப்படும்.

## இடைவேளை

மாணவர்களுக்கு இடைவேளையின் போது (பிற்பகல் 3:15 முதல் 3:30 மணி வரை) பிஸ்கற்றும், குளிர்பானமும் வழங்கப்படும்.பாடசாலையில் இணையும் முதற்கிழமையில் பெற்றோர் இவற்றை பார்வையிட்டுத் தங்கள் குழந்தைகளுக்கு ஏற்றது என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.குறிப்பாக உங்கள் குழந்தைக்கு உணவு ஒவ்வாமை இருப்பின் இதுபற்றி நிர்வாகக் குழுவுடன் கலந்தாலோசிக்கவும்.

## பாடசாலை அறிவித்தல்கள்

அவ்வப்போது பாடசாலை சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள்செய்தி மடல் (Newsletter), மின்அஞ்சல் (e-mail), இணையத்தளம் (wtsc.org.au),முகப்புத்தகம் (facebook) மற்றும் கைப்பேசிசெயலி(mobile application) மூலம் அறிவிக்கப்படும். செய்தி மடல்கள் மின்அஞ்சல் (e-mail) மூலமாகவும் கைப்பேசி செயலி(mobile application)மூலமாகவும் அனுப்பப்படும்.இது தவிர பாடசாலை நாட்களில், பாடசாலை அறிவித்தல் பலகையிலும் பிற்பகல் 3:00 மணி முதல் 3:15 மணி வரை நடைபெறும் மாணவர் ஒன்றுகூடலிலும் முக்கியமான அறிவித்தல்கள் வழங்கப்படும். எனவே பெற்றோர்கள் ஒன்றுகூடலில் பங்குபற்றுவது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

## நிதி உதவி

இப்பாடசாலையினை நடாத்துவதற்கு நியூ சவுத்வேல்ஸ் மாநில அரசிடமிருந்து ஒழுங்காகப் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் சார்பாக சிறிய தொகை நிதியுதவி கிடைக்கப்பெறுகின்றது. இந்நிதியானது குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக மட்டுமே பாவிக்கப்படலாம் என்பதுடன் எமது பாடசாலையை நடாத்துவதற்கு போதுமானதல்ல. ஆகவே பெற்றோரிடமிருந்து பின்வரும் நிதி அறவிடப்படுகிறது:

நடப்பு கல்வியாண்டில் குடும்பத்தின் முதலாவது மாணவருக்கு தவணை ஒன்றிற்கு $25உம் அதே குடும்பத்தின் இரண்டாவது மாணவருக்கு $20உம் அதே குடும்பத்தின் மூன்றாவது மாணவருக்கு $15உம் வசதிப்பணமாகச் செலுத்த வேண்டும். இத்துடன் ஒவ்வொரு குடும்பத்தினரும் கலை பண்பாட்டு நிதியாக

$20உம் வருடாந்தம் செலுத்த வேண்டும். ஒரே குடும்பத்தின் நான்காவது அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்குக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசினால் வழங்கப்படும் Creative Kids voucher இனை மாணவரின் நடப்பு ஆண்டிற்கான தவணைக் கட்டணங்களையும் கலை பண்பாட்டு நிதியையும் செலுத்தப் பயன்படுதலாம்.

அத்துடன் மாணவர்களின் போதிய வரவின்மை காரணமாக அரசமானியம் கிடைக்கப்பெறாதவிடத்து அந்தந்த மாணவர்களுக்குரிய மானியத் தொகையை பெற்றோர்கள் செலுத்துமாறு எதிர்பார்க்கப்படலாம். எனவே பெற்றோர்கள் மாணவர்களின் வரவில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு:கலை பண்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதி முதலாவது தவணை ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டும். வசதிப் பணம் தவணை ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.

## தகவல்களை சேகரித்தல்

எமது கல்வி நிலையத்தை நிர்வகிப்பதற்கு அவசியமானது என்று கருதப்படும் உங்களதும் இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் உங்கள் பிள்ளைகளினதும் விபரங்கள் சேகரிக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்படுகின்றன. இவற்றுள் சில தகவல்கள் [மாணவர் கல்வி கற்கும் பாடசாலை(Mainstream School), பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் போன்றவை] மாநில கல்வி திணைக்களத்தினால் நிதி உதவி வழங்குவதற்காகவும் பிற காரணங்களுக்காகவும் கோரப்படுகின்றன. அத்துடன் எமது நிலையத்தின் கல்வி,நிர்வாக தேவைகளுக்கும் இவ்விபரங்கள் பயன்படுத்தப்படும். மேலும் இத்தகவல்கள் பாடசாலை வேளையில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது உங்களைத் தொடர்பு கொள்ளவும் பயன்படுத்தப்படும்.முக்கியமான அறிவித்தல்கள், செய்திமடல்கள் என்பன மின்னஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். மின்னஞ்சல் எமது பாடசாலையின் அலுவலக தொடர்பாடல் முறைமை என்பதால் எல்லா பெற்றோர்களும் தங்கள் நாளாந்தப் பாவனையிலுள்ள குறைந்தபட்சம் ஒரு மின்னஞ்சல் முகவரியையாவது வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் உங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது உணவு ஒவ்வாமை (Food Alergy) அல்லது வேறு ஏதாவது விசேட மருத்துவத் தேவை (Special medical need) இருப்பின் அதனை எமக்கு உடன் அறியத்தருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். உங்கள் பிள்ளைகள் ‘விசேட தேவை’ (Special Need) உடையவர்களாக இருந்தால் அதுபற்றிய விரிவான தகவலை எமக்குத் தருவது பெற்றோர்களின் கடமையாகும்.

## மாணவர் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகள்

வகுப்பறையிலும் பாடசாலை வளாகத்திலும் மாணவர்கள் மற்றையோருக்கு இடைஞ்சல் செய்யாத வண்ணம் நடத்ததல் வேண்டும். பெரியோர்களையும் சகமாணவர்களையும் மதித்து பாடசாலை விதிமுறைகளுக்கு ஏற்பவாறு எப்பொழுதும் இருத்தல் வேண்டும். பாடசாலை சார்ந்த வெளி நிகழ்வுகளிலும் அதே ஒழுக்க முறைமை கடைப்பிடித்தல் வேண்டும். பாடசாலை விதிமுறைகளை மீறும் மாணவர்களின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆசிரியர் மற்றும் அதிபர் விருதுகள்

மாணவர்கள் வகுப்பில் தமது திறமைகளை வெளிப்படுத்துதல், ஒழுக்கமாக இருத்தல், ஆசிரியர் கற்பிப்பதை கவனமாக செவிமடுத்தல், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல் போன்றவற்றிற்காக ஆசிரியரினால் மாணவர்களுக்கு ஆசிரியர் விருது வகுப்பில் வழங்கப்படும். ஐந்து ஆசிரியர் விருதுகள் பெற்ற மாணவர்கள் ஒரு அதிபர் விருதுக்கு தகமையுடையவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு பாடசாலை ஒன்றுகூடலின் போது அதிபரால் அதிபர் விருது வழங்கப்படும்.

# மதிப்பீடுகள்

ஒவ்வொரு தவணை முடிவிலும் எழுத்து மற்றும் வாசிப்பு தவணைமதிப்பீடுகள் (Term Assessments) நடாத்தப்படும். எழுத்து மதிப்பீட்டுக்குரிய வினாத்தாள்கள் அந்தந்தத்தரத்திலுள்ள (Grade) எல்லா பிரிவு (Division) ஆசிரியர்களும் கலந்துரையாடி பொதுவான வினாத்தாளாக தயாரிக்கப்படும். வாசிப்பு மதிப்பீடு அந்தந்தப் பிரிவு (Division) ஆசிரியர்களால் மாணவர்கள் பாடத்திலுள்ள பகுதிகளை வாசிக்கக் கொடுப்பதன் மூலம் நடாத்தப்படும். வாசிப்பு மதிப்பீட்டுக்கான புள்ளிகள் அந்தந்த பிரிவுக்குள் தரப்படுத்தல் (standardised) செய்யப்பட்டு இறுதிப்புள்ளிகள் கணிக்கப்படும்.

**முதலாம் தவணை:**

முதலாம் தவணை முடிவில் முதலாம் தவணை மதிப்பீடு (Term 1 Assessment) நடாத்தப்படும்.

**இரண்டாம் தவணை:**

இரண்டாம் தவணை முடிவில் அரையாண்டு மதிப்பீடு (Half yearly assessment) நடாத்தப்படும்.இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**மூன்றாம் தவணை:**

மூன்றாம் தவணை இறுதியில் மூன்றாம் தவணை மதிப்பீடு (Term 3 Assessment) நடாத்தப்படும்.

**நான்காம் தவணை:**

நான்காம்தவணை இறுதியில் ஆண்டிறுதிமதிப்பீடு (Year end assessment) நடாத்தப்படும்.இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

# மீள் மதிப்பீடு (Reassessment)

மாணவர் ஒருவர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் மதிப்பீடு ஒன்றிற்கு வர முடியாது போனால் அல்லது வர முடியாது இருக்கும் என எண்ணுகின்ற சந்தர்ப்பங்களில் மீள் மதிப்பீடு ஒன்று பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுகின்ற சந்தர்ப்பங்களில் நடாத்தப்படும்.

1. வர முடியாமைக்கான காரணத்தை எழுத்து மூலம் அதிபருக்கு ஒருவாரத்திற்குள் அறிவித்தல்.
2. மாணவர் மதிப்பீட்டுக்கு சமூகமளிக்காத நாளில் இருந்து இரு வாரத்திற்குள் (பின்னதாக) மீள்மதிப்பீடு நடாத்தப்படுமாயின் அதில் பங்குபற்றுவதற்கு தயாராக இருத்தல்.

# தொடர் மதிப்பீடுகள்

## ஆரம்பப் பள்ளி முதல் ஆண்டு 9 வரை

தமிழ் மொழிக் கல்வியில் முக்கியமாக எழுத்து, வாசிப்பு, போன்ற பகுதிகளில் மாணவர்களின் முன்னேற்றமானது தொடர்ந்து நான்கு தவணைகளும் மதிப்பிடப்பட்டு வருகிறது.மாணவர்கள் ஒவ்வொரு தரத்திற்கும் முன்னேற்றப்படும்போது, அந்த வகுப்பில் தம்மைஸ்திரப்படுத்திக்கொண்டு வகுப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும் என்ற நோக்கில், ஒவ்வொருதவணையும் அந்தந்த பகுதிகளில் பெற்ற புள்ளிகளில் இருந்து விகிதாசார அடிப்படையில் இறுதிப்புள்ளிகள் கணிக்கப்படும். விகிதாசாரமானது முதலாம், இரண்டாம் தவணைகளை விடமூன்றாம், நான்காம் தவணைகளிற்கு அதிகமாகக் கருத்தில் கொள்ளப்படும்.இந்த இறுதி புள்ளிகள் பரிசளிப்பு விழாவில் எழுத்து மற்றும் வாசிப்பு பகுதிகளுக்கான பரிசில்களை தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

## எழுத்து மதிப்பீட்டுக்குரிய (Writing Assessment) விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) எழுதக் கொடுக்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் மதிப்பீடு ஆரம்பிக்கும் முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. வகுப்பு ஆசிரியர்கள் வீட்டு வேலைக்கு புள்ளிகளை வழங்குவார்கள்.
4. படித்த பாடங்கள் முழுவதிலும் வெவ்வேறு பகுதிகள் அடங்கியதாக ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் பரீட்சைக்காக மாணவர்களுக்குக் கொடுக்கப்படும்.
5. ஒவ்வொரு சரியான பதில்களுக்கும் அந்தக் கேள்விக்கு ஒதுக்கப்பட்ட முழுப்புள்ளிகளும் வழங்கப்படும்.
6. எழுத்துப்பிழை,மற்றும் சொல் வாக்கிய அமைப்பு, இலக்கணம் ஆகியவற்றில் பிழைகள் இருப்பின் புள்ளிகள் குறைக்கப்படும்.
7. தொடர் மதிப்பீட்டின் இறுதிப்புள்ளிகள் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிப்பீடு செய்யப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆரம்பப்பள்ளிமுதல் ஆண்டு 5வரை மற்றும் புகுநிலை இணைப்பு வகுப்புக்கள் | ஆண்டு 6 முதல் ஆண்டு 9 வரை |
|---|---|---|
| முதலாம் தவணை மதிப்பீடு | தவணை 1 அல்லது 2 இல் பெற்ற அதிகூடிய புள்ளியிலிருந்து 15% | 10% |
| இரண்டாம் தவணை மதிப்பீடு | | 10% |
| மூன்றாம் தவணை மதிப்பீடு | 25% | 20% |
| நான்காம் தவணை மதிப்பீடு | 40% | 40% |
| வீட்டு வேலை | 10% | 10% |
| பாடசாலை வரவு | 10% | 10% |
| மொத்தம் | 100% | 100% |

8. **வீட்டுவேலை:** இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். கொடுக்கப்படும் ஒவ்வொரு வீட்டு வேலையையும் முழுவதும் செய்தால் வீட்டு வேலைக்கான 50 சதவீத புள்ளிகள் கொடுக்கப்படும். குறைவாகச் செய்திருந்தால் அதற்கேற்ப புள்ளிகள் கொடுக்கப்படும். மிகுதி 50 சதவீதப் புள்ளிகள் பிழை விடாது எழுதுதல், தெளிவாக எழுதுதல் போன்றவற்றுக்குக் கொடுக்கப்படும். ஓவ்வொரு வீட்டு வேலைக்கும் ஆசிரியர் புள்ளிகள் வழங்குவார். மாணவர்கள் பாடசாலைக்கு வராத நாட்களில் செய்யத் தவறிய வீட்டு வேலையை ஆசிரியரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவது பெற்றோர் அல்லது மாணவரது பொறுப்பாகும்.
9. **பாடசாலை வரவு:** நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து ஆண்டிறுதி மதிப்பீடு நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக ஆண்டிறுதி மதிப்பீட்டுக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

### வாசிப்பு மதிப்பீட்டுக்குரிய ( Reading Assessment) விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாசிக்கக் கொடுக்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் மதிப்பீடு ஆரம்பிக்கு முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. வகுப்பு ஆசிரியர்கள் நடுவர்களாக இருந்து மதிப்பீட்டுப் புள்ளிகளை வழங்குவார்கள்.
4. படித்த பாடங்கள் முழுவதிலும் இருந்து ஒரு பகுதியில் மதிப்பீடு நடைபெறும். பிழை விடாது வாசித்தல், தெளிவாக வாசித்தல், சரளமாக வாசித்தல் போன்றவற்றுக்குப் புள்ளிகள் கொடுக்கப்படும். எந்தப் பகுதியில் மதிப்பீடு நடைபெறும் என்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட மாட்டாது.
5. ஆண்டு7 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில் உள்ள மாணவர்களுக்குப்படித்த பாடங்கள் முழுவதிலும் இருந்து ஒரு பகுதியும், படிக்காத ஒரு பகுதியிலிருந்தும் வாசிப்புமதிப்பீடு நடைபெறும். படித்த பாடங்களை வாசிப்பதற்கு 65 சதவீத புள்ளிகளும் படிக்காத பாடங்களை வாசிப்பதற்கு 20 சதவீத புள்ளிகளும் கேட்கப்படும் ஒவ்வொரு சரியான பதிலுக்கும் 5 புள்ளிகள் வீதம் கொடுக்கப்படும்.
6. தொடர் மதிப்பீட்டின் இறுதிபுள்ளிகள் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிப்பீடு செய்யப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆரம்பப்பள்ளிமுதல் ஆண்டு 5வரை மற்றும் புகுநிலை இணைப்பு வகுப்புக்கள் | ஆண்டு 6 முதல் ஆண்டு 9 வரை |
|---|---|---|
| முதலாம் தவணை மதிப்பீடு | தவணை 1 அல்லது 2 இல் பெற்ற அதிகூடிய புள்ளியிலிருந்து 20% | 10% |
| இரண்டாம் தவணை மதிப்பீடு | | 10% |
| மூன்றாம் தவணை மதிப்பீடு | 30% | 30% |
| நான்காம் தவணை மதிப்பீடு | 40% | 40% |
| பாடசாலை வரவு | 10% | 10% |
| மொத்தம் | 100% | 100% |

7. **பாடசாலை வரவு:** நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து ஆண்டிறுதி மதிப்பீடு நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக ஆண்டிறுதி மதிப்பீட்டுக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

## ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 12 HSC வரை

### மதிப்பீட்டு விதிமுறைகள்

மேல் வகுப்புகளில் கற்கைப்பகுதிகள் மாணவர்களை நியூ சவுத் வேல்ஸ் உயர்வகுப்பு (HSC) பரீட்சைக்கு தயார்படுத்தும் வகையில் திட்டமிட்டு நடாத்தப்படுகின்றன. இதன்படி மதிப்பீடுகளும் கேட்டுப் பதிலளித்தல், வாசித்துப் பதிலளித்தல், எழுத்தாக்கம், வாய்மொழித்தொடர்பாடல் என்று நான்கு பகுதிகளில் மதிப்பிடப்படுகின்றன.

ஒவ்வொரு தவணையும் அந்தந்த பகுதிகளில் பெற்ற புள்ளிகளை விகிதாசார அடிப்படையில் கொண்டு தொடர் மதிப்பீட்டின் புள்ளிகள் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிப்பீடு செய்யப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 11 HSC வரை | ஆண்டு 12 HSC |
|---|---|---|
| முதலாம் தவணை மதிப்பீடு | 10% | 30% |
| இரண்டாம் தவணை மதிப்பீடு | 15% | 30% |
| மூன்றாம் தவணை மதிப்பீடு | 25% | 30% |
| நான்காம் தவணை மதிப்பீடு | 40% | - |
| பாடசாலை வரவு | 10% | 10% |
| மொத்தம் | 100% | 100% |

**பாடசாலை வரவு - ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 11 HSC வரை மாணவர்களுக்கு:** நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து ஆண்டிறுதி மதிப்பீடு நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக ஆண்டிறுதி மதிப்பீட்டுக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

**பாடசாலை வரவு - ஆண்டு 12 HSC மாணவர்களுக்கு:** நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து மூன்றாம் தவணை மதிப்பீடு நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக மூன்றாம் தவணை மதிப்பீட்டுக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

# போட்டிகள்

## பேச்சும் வாய்மொழித் தொடர்பாடலும் போட்டி

மாணவர்களின் தமிழில் உரையாடும் திறனை ஊக்குவிக்கும் முகமாக பேச்சுப் போட்டியுடன் வாய்மொழித் தொடர்பாடல் போட்டி இணைக்கப்பட்டுள்ளது. இப் போட்டிகளுக்கான புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. இப் போட்டிகளில் மாணவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி அழைக்கப்படுவார்கள்.பேச்சுப் போட்டி முடிவடைந்தவுடன் மாணவர்களுக்கான வாய்மொழித் தொடர்பாடல் போட்டி இடம் பெறும்.

# ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 9 வரை

## பேச்சுப் போட்டி விதிமுறைகள்:

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம் பேசுவதற்காகக் கொடுக்கப்படும்.
2. மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பேச்சுப் போட்டியில் பேசும்பொழுது குறிப்பிடக்கூடாது.
3. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவர் நடுவர்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசுதல் வேண்டும்.
4. பேச்சுப் போட்டியில் கொடுக்கப்பட்ட விடயங்களுக்கு (அவை வணக்கம் உட்பட) மேலாக எதையும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளக் கூடாது.
5. பேசும்பொழுது தடங்கல் ஏற்பட்டால் உதவி செய்யப்படும். ஆனால் இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
6. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்குமுன் பாடசாலைக்குச் சமுகம் அளிக்கவேண்டும்.

## வாய்மொழித் தொடர்பாடல் போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாய்மொழித் தொடர்பாடல் போட்டியிற் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கு முன் பாடசாலைக்குச் சமுகம் அளிக்க வேண்டும்.
3. வாய்மொழித் தொடர்பாடல் போட்டியில் மாணவர்களின் தமிழில் உரையாடும் (பேச்சுத் தமிழ்) திறன் மதிப்பிடப்படும்.
4. மாணவர்களின் தமிழில் உரையாடும் திறனை மதிப்பிடுவதற்கான பொதுவான வினாக்கள் கேட்கப்படும். ஆண்டு 5உம் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கும் பேச்சுப் போட்டியிற் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்து 3 கேள்விகள் கேட்கப்படும்.
5. மாணவர்களின் தமிழ்ச் சொற் பயன்பாடு, தமிழ் மொழியை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன்,கூச்சமின்றிப்பேசும் தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
6. வகுப்பு ஆசிரியர்கள் பாடசாலை வரவு, வகுப்பில் தமிழில் கதைத்தல்ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்குவார்கள்.
7. போட்டிகளுக்கான மதிப்பீட்டுப் புள்ளிகள் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிக்கப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆரம்பப்பள்ளி | ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை மற்றும் புகுநிலை இணைப்பு வகுப்புக்கள் | ஆண்டு 6 முதல் ஆண்டு 9 வரை |
|---|---|---|---|
| பாடசாலை வரவு | 10 புள்ளிகள் | 10 புள்ளிகள் | 10 புள்ளிகள் |
| பேச்சுப் போட்டிக்கான நடுவர்களின் மதிப்பீடு | 70 புள்ளிகள் | 60 புள்ளிகள் | 50 புள்ளிகள் |
| - *மேடை மரபு* | *5 புள்ளிகள்* | *5 புள்ளிகள்* | *5 புள்ளிகள்* |
| - *தெளிவான, சரியான உச்சரிப்பு* | *15 புள்ளிகள்* | *15 புள்ளிகள்* | *15 புள்ளிகள்* |
| - *பொருள் விளங்கச் சுவைபடப் பேசுதல்* | *15 புள்ளிகள்* | *15 புள்ளிகள்* | *15 புள்ளிகள்* |
| - *பிழை விடாது பேசுதல்* | *35 புள்ளிகள்* | *25 புள்ளிகள்* | *15 புள்ளிகள்* |
| வாய்மொழித் தொடர்பாடலுக்கான மதிப்பீடு | 20 புள்ளிகள் | 30 புள்ளிகள் | 40 புள்ளிகள் |
| - *வகுப்பில் தமிழில் கதைத்தல்* | *10 புள்ளிகள்* | *10 புள்ளிகள்* | *15 புள்ளிகள்* |
| - *போட்டி நாளன்று நடுவர்களின் மதிப்பீடு* | *10 புள்ளிகள்* | *20 புள்ளிகள்* | *25 புள்ளிகள்* |

8. **பாடசாலை வரவு:** நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முன்பு உள்ளபாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள்குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள், அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

9. **வகுப்பில் தமிழில் கதைத்தல்:**இதற்குஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். மாணவர் வகுப்பு நேரங்களில் வகுப்பறையில் சக மாணவர்களுடனும் ஆசிரியருடனும் தமிழில் உரையாடியதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

## ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 12 HSC வரை

### பேச்சும் வாய்மொழித் தொடர்பாடலும் போட்டி விதிமுறைகள்

1. ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 12 HSC வரை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எல்லோரும் அந்தந்த வருட கருப்பொருளை மையமாக வைத்து தங்கள் பேச்சை ஆயத்தம் செய்தல் வேண்டும்.
2. மாணவர்கள் தரப்பட்ட கருப்பொருள் சார்ந்து உபதலைப்புகளையும் தெரிவு செய்யலாம். போட்டிக்கு முதல் கிழமை தமது பேச்சின் இறுதிப் பிரதியொன்றை உப அதிபரிடம் கொடுக்கவேண்டும்.
3. மாணவர்களின் பேச்சிற்கான நேரம் 3 முதல்5 நிமிடங்கள்ஆகும். பேச்சானது 3 நிமிடத்திற்கு குறைவாகவோ அல்லது 5 நிமிடங்களிற்கு கூடவாகவோ இருப்பின் புள்ளிகள் குறைக்கப்படும்.
4. ஆண்டு 11 HSC, 12 HSC வகுப்பு போட்டியாளர்களுக்கான வாய்மொழித் தொடர்பாடல் (interview), போட்டி நடைபெறும் தினத்தில் மாணவர் பேசி முடித்தபின்னர் (மேடையில் நிற்கும்போதே) நடைபெறும்.
5. ஆண்டு 9 HSC, 10 HSC வகுப்பு போட்டியாளர்களுக்கானவாய்மொழித் தொடர்பாடல் (interview), போட்டி நடைபெறும் தினத்தில் மாணவர்கள் பேசி முடித்தபின்னர் அல்லது முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட வேறொரு தினத்தில் வேறு வகுப்பறையில் நடைபெறும்.
6. வாய்மொழித் தொடர்பாடலின்போது, ஒவ்வொரு நடுவராலும் தலா ஒவ்வொரு கேள்வி கேட்கப்படும்.
7. போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். மாணவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி அழைக்கப்படுவார்கள்.
8. போட்டி ஆரம்பிப்பதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக பாடசாலைக்கு வந்து அடையாள இலக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9. மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பேச்சுப் போட்டியில் பேசும்பொழுது சொல்லக்கூடாது.
10. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவர், நடுவர்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசிக்காட்ட வேண்டும்.
11. மாணவர்கள் சிறிய அட்டைகளில் (குறுவட்டைகளில்) பேச்சைச் சுருக்கமான வகையில் எழுதி இடையிடையே பார்த்துப் பேசமுடியும். மாணவர்கள் தாம் எழுதிய பேச்சை அதே வகையில் ஒப்புவிக்கத் தேவையில்லை. பேச்சிலுள்ள விடயங்களை உள்ளடக்கிப் பேசுதல் போதுமானதாகும்.
12. போட்டி மதிப்பீட்டுப் புள்ளி விபரம்:

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆண்டு 9 HSC முதல் ஆண்டு 12 HSC வரை |
|---|---|
| பாடசாலை வரவு | 10 புள்ளிகள் |
| நடுவர்களின் மதிப்பீடு | 20 புள்ளிகள |
| *- வாய்மொழித் தொடர்பாடல்* | *20 புள்ளிகள்* |
| நடுவர்களின் மதிப்பீட்டுப் புள்ளி (மேடைப் பேச்சில்) | 70 புள்ளிகள |
| *- மேடை மரபு* | *15 புள்ளிகள்* |
| *- இலக்கணமும் உச்சரிப்பும்* | *25 புள்ளிகள்* |
| *- பேச்சுத் திறன் (உள்ளடக்கம் 10, பொருள் உணர்ந்து பேசுதல் 20)* | *30 புள்ளிகள்* |

13. **பாடசாலை வரவு:** இந்த வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து போட்டி நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். இரண்டு (2) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. இரண்டு (2) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் இல்லை. எனினும்,வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள்,அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக போட்டிக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

# தமிழ் அறிவுப் (வினா விடைப்) போட்டி

## போட்டி விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வினா விடைப் போட்டியில் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்கு முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. இப் போட்டிகள் கீழ் வகுப்பு மாணவர்கள் மேல் வகுப்பு மாணவர்கள் என இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
4. கீழ் வகுப்பு மாணவர்களிடம் 10 முதல் 15 தமிழ் அறிவு சம்பந்தமான கேள்விகளும் மேல் வகுப்பு மாணவர்களிடம் 15 கேள்விகளும்கேட்கப்படும்.
5. மேல் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் அறிவுப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றிலிருந்து இரண்டாம்சுற்றிற்கு 8 மாணவர்களும், இரண்டாம் சுற்றிலிருந்து இறுதிச் சுற்றிற்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.
6. ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
7. இப்போட்டிகள் ஆண்டு 12 மாணவர்களுக்கு நடைபெற மாட்டாது.

## பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% இற்கு தரப்படுத்தப்பட்டு (standardised) அதிலிருந்து மற்றைய மாணவர்களின் புள்ளிகள் அதற்கேற்ப வரிசைப்படுத்தப் பட்டு தரம் பிரிக்கப்படும். 35 புள்ளிகளிற்கு மேல் எடுத்தவர்கள் மாத்திரமே பரிசில்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களாவர். போட்டிக்கான பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். ஒரு வகுப்பில் போட்டியில் 35 இற்கு மேல் புள்ளிகள் எடுத்த மாணவர்களின் புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு கீழ் தரப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு பரிசில்கள் வழங்கப்படும்.

## ஆரம்பப் பள்ளி முதல் ஆண்டு 10HSC வரை

| | |
|---|---|
| 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுதவர்கள் அத்துடன் முதல் 20% மாணவர்கள். | முதலாம் பிரிவு |
| 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (90 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | இரண்டாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (80 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | மூன்றாம் பிரிவு |
| 35 அல்லது 35 புள்ளிக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |
| 35 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள். | பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் |

## ஆண்டு 11 HSC மற்றும் ஆண்டு 12 HSC

| | |
|---|---|
| 85 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுதவர்கள் | முதலாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (85 புள்ளிகளுக்குக் கீழ்) | இரண்டாம் பிரிவு |
| 60 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (70 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | மூன்றாம் பிரிவு |
| 50 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |
| 50 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள். | பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் |

## அமைச்சர் விருது (Minister Award)

நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்கத்தின் சமுதாய மொழிப் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் மேற்பிரிவு மற்றும் கிழ்ப்பிரிவு என்னும் இரு நிலைகளில் ஒவ்வொரு மொழிப் பாடசாலை மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் மாநில மட்டத்தில் வழங்கப்படும். இவ் அமைச்சர் விருதுக்கு உங்கள் பிள்ளைகளைப் பரிந்துரை செய்ய விரும்பினால், விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பி சான்றிதழ்களுடன் முடிவுத் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சிறந்த மாணவர் தெரிவு செய்யப்பட்டு பாடசாலையினால் பரிந்துரை செய்யப்படுவார்.

## உயர் தரம் (HSC)

ஆண்டு 9 முதல் ஆண்டு 12 வரையான வகுப்புக்கள், உயர் தரமாகப் பிரிக்கப்பட்டு மேலதிக கவனத்துடன் நிர்வகிக்கப்படுகின்றன. இவ் வகுப்புக்களிற்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். மாணவர்களின் தொடர்ச்சியான தமிழ்க் கல்வி முன்னேற்றத்தை உறுதிசெய்யும் பொருட்டு உயர்தரத்திற்கு உள்ளக இணைப்பாளராக உயர்தர ஆசிரியர் ஒருவர் கடமையாற்றுகிறார். ஆண்டு 11 மற்றும் 12 இல் உள்ள மாணவர்களின் பிரதான பாடசாலைகளுடனான தொடர்பாடல்களை மேம்படுத்த வெளிவாரி இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வேளிவாரி இணைப்பாளர் உயர்தரப் பரீட்சை விண்ணப்பங்களைப் பிரதான பாடசாலையூடாக சமர்ப்பிக்கின்றார். மாணவர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகளைச் சரிபார்த்து மாணவர்களின் பிரதான பாடசாலைக்கு உரிய நேரத்தில் வழங்குவதையும் இவர் உறுதிப்படுத்துகின்றார். மாணவர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகள் அதிபர்கள், உள்ளக மற்றும் வெளிவாரி இணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகக் குழுத் தலைவர் அடங்கிய குழுவினால் சரிபார்க்கப்படுகிறது. உயர்தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு பாடவிதான மேற்பார்வையாளராக நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) ஆசிரியர் ஒருவர் கடமையாற்றுகிறார்.

எமது மாணவர்கள் நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் ஆண்டு 11 மற்றும் ஆண்டு 12 இற்கான பாடத்திட்டத்திற்கமைய (படிநிலை 6) பிரதான பாடசாலையில் உயர்தரப் பரீட்சைக்குத் தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுக்கின்றனர். இது அவர்களின் உயர்தரப் பரீட்சையில் பல்கலைக் கழக அனுமதிக்கு 2 அலகுகளாகக் (2 Units) கருதப்படுகின்றது.

உயர்தரத்தில் தமிழைக் கற்கும் மாணவர்கள், பின்வரும் பாட அலகுகளை நியூ சவுத் வோல்ஸ் கல்வித் திணைக்களத்தின் பாடவிதானத்திற்கு ஏற்பக் கற்கின்றார்கள்.

- எழுத்து

- கேட்டலும் கிரகித்தலும்
- வாசித்தலும் பதிலளித்தலும் (ஆங்கிலத்தில் பதிலளித்தல், தமிழில் பதிலளித்தல்)
- வாய்மொழித் தொடர்பாடல் (தொடர்பாடல், ஆய்வும் கலந்துரையாடலும்)

தகுதியும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களால் இப்பாட அலகுகள் கற்பிக்கப்படுகின்றன. பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக்கள் நடைபெற்று மாணவர்களின் தமிழ்க் கல்வி முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படுகின்றது. தொடர்ச்சியான மதிப்பீடுகள் மாணவர்களின் தமிழ் அறிவு மட்டத்தை அளவிடவும், மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் உதவுகின்றன. மாணவர்களின் மதிப்பீட்டு அடைவுகள் பெற்றோர்களிற்கு விரிவான மாணவர் அறிக்கையூடாக வழங்கப்டுகின்றன.

ஆண்டு 9 மாணவர்களிற்கு பாடசாலை வாரங்களில் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணிமுதல் 5:00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அதிக மாணவர்கள் இருக்கும் இடத்தில் ஆண்டு 9 இரு வகுப்புகளாக நடாத்தப்படுகிறது.

ஆண்டு 10 மற்றும் ஆண்டு 11 இற்கு பாடசாலை வாரங்களில் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணிமுதல் 5:30 மணிவரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அதிக மாணவர்கள் இருக்கும் இடத்தில் வாய்மொழித் தொடர்பாடல் இரு வகுப்புகளாக நடாத்தப்படுகிறது.

ஆண்டு 12 மாணவர்களிற்கு பாடசாலை வாரங்களில் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணிமுதல் 5:30 மணிவரையும், மேலதிகமாக வியாழக்கிழமைகளில் இரவு 7:00 மணிமுதல் 9:00 மணிவரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விடுமுறைக் காலங்களில் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அதிக மாணவர்கள் இருக்கும் இடத்தில் வாய்மொழித் தொடர்பாடல் இரு வகுப்புக்களாக நடாத்தப்படுகிறது. மாணவர்களின் வாய்மொழித் தொடர்பாடலில் ஆய்வும் கலந்துரையாடலும் பகுதிக்கு வளவாளர்களாக தமிழ் மொழி, கலை, இலக்கியம், கவிதை, இசை, நாடகம், நாட்டியம், கூத்து மற்றும் இயல் ஆகிய துறைகளில் விற்பனர்களான தமிழறிஞர்கள் உதவிபுரிகின்றார்கள்.

ஆண்டு 10, 11 மற்றும் 12 மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் தகவல்களைப் பரிமாறும் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதில் நிர்வாகக்குழுவும் அதிபர்களும் இணைப்பாளர்களும் கலந்துகொள்கின்றனர். மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மதிப்பீட்டு அட்டவணை ஆண்டின் ஆரம்பத்திலேயே கொடுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் உயர்தரம் பற்றிய தகவல் வழங்கும் கூட்டம் நடைபெறுகின்றது. இதில் ஆண்டு 6 முதல் 12 வரை கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து உயர்தரப் பரீட்சை பற்றியும் உயர்தர வகுப்புக்கள் பற்றியும் அறிந்துகொள்ளலாம்.

பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் ஆண்டு 11 மற்றும் ஆண்டு 12 இற்கான பாடத்திட்டத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் (படிநிலை 6):

https://educationstandards.nsw.edu.au/wps/portal/nesa/11-12/stage-6-learning-areas/stage-6-languages/continuers/tamil-continuers-syllabus/

## நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் தமிழ் பாடத்திட்டம்

## NESA K-10 TAMIL SYLLABUS

நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப் பள்ளி முதல் ஆண்டு 10 வரையான பாடத்திட்டத்தினை பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளலாம் (படிநிலை 1 முதல் 5 வரை):

https://educationstandards.nsw.edu.au/wps/portal/nesa/k-10/learning-areas/languages/tamil-k-10-2019

## இந்த வருடத்துக்கான திட்டங்கள்

- மாணவர்களின் ஒழுக்கத்தையும், பாதுகாப்பையும் உறுதிப் படுத்த பாதுகாப்புக் குழுவின் செயற்பாடுகளை விருவுபடுத்துதல். பாதுகாப்புக் குழுவை உப குழுவாக செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்.
- மாணவர்களிடையே தமிழில் பேசும் திறனை அதிகரிப்பதற்காக வகுப்பறை உரையாடலைத் தொடர்ச்சியாக மேற்கொள்வது. அத்துடன் மாணவர்களின் பேசும் திறனை அதிகரிப்பதக்கும் ஊக்குவிப்பதக்கும் ஊக்குவிப்புக்களை வழங்குதல்.
- கல்விக்கான உபகுழுவின் செயற்பாடுகளிற்கு தொடர்ந்து முக்கியத்துவம் கொடுத்து கல்வி நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றுதல். அத்துடன் செயற்பாடுகளை அதிகரிப்பதக்கு நடை நடைமுறைக்கு தகுந்தமாதிரி அனுபவம் வாய்ந்தவர்களை பயன்படுத்துதல்.
- பாடசாலை வகுப்புகள் ஐந்து பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருங்கிணைப்பாளர் தெரிவுசெய்யப்பட்டு இவர்கள் ஊடாக ஒவ்வொரு பிரிவிலும் ஆசிரியர்களின் கல்விச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- ஆசிரியர்களுக்கான பயிற்சிகளிற் கூடிய கவனம் செலுத்துதல்.
- எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் முகமாக நாங்கள் ஒரு நகர்வை தொடங்கி உள்ளோம், (**Australian** Professional **Standards** for all Teachers - Accreditation Journey for our teachers) இதன் தேவைக்கு ஏற்ப செயற்பாடுகளை விருவுபடுத்துதல்.
- உயர்தர மாணவர்களின் வாய்மொழித் தொடர்பாடல் ஆய்வுப் பகுதிக்கு வளவாளர்களின் உதவியை மாணவர்களிற்கு வழங்குதல், தமிழ் ஆர்வலர்கள் பேராசிரியர்களை அளைத்து கருத்தரங்கு நடாத்துதல்.
- இவ்வருடம் நிர்வாகம் சில முயற்சிகள் செய்வதற்கு அத்துடன் முடிவுகள் எடுப்பதக்கு (Action Plan) நிர்வாகக் குழு பெற்றோர்களிடமிருந்து பாடசாலையின் தற்போதைய எதிர்கால கல்வி நிலவரம் சம்பந்தமாக, நிர்வாகம் என்ன செய்யலாம் என்ற கணிப்பை மேற்கொண்டுள்ளோம்.
- பாடசாலையின் அனைத்து பிரிவுகளையும்(நிர்வாகம்) ஒரு கூரையின் கீழ் கொன்டு வருதல். பாடசாலை நிர்வாக கட்டமைப்பை (School Managements System and Centralized) வலுவூட்டுவதற்காக எதிர்காலத தேவை நிமித்தம் கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்வது.

## பாடசாலை மாணவர்களின் கடமைகள்

- பாடசாலைக்குத் தவறாது சமுகமளிப்பதுடன் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னதாக வகுப்பறைக்கு வருதல் வேண்டும்.
- ஆசிரியர் வகுப்பறைக்குள் சென்ற பின்னரே மாணவர்கள் வகுப்பறைக்குள் செல்ல வேண்டும்.
- வகுப்பாசிரியர் கேட்டுக்கொண்டால் அன்றி வகுப்பு ஒழுங்கை மாற்றி அமைக்கக் கூடாது. அவ்வாறு வகுப்பு ஒழுங்கை மாற்றி அமைக்கும் பட்சத்தில் பாடசாலை முடிவடையும் போது ஆரம்பத்தில் இருந்தவாறு வகுப்பு ஒழுங்கை மீள அமைப்பதற்கு உதவ வேண்டும்.
- வகுப்பறை பொருட்களைச் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. வகுப்பறை உடைமைகளைச் சேதப்படுத்தக் கூடாது.
- வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் நடந்து கொள்ள வேண்டும்.

- வீட்டு வேலைகள் தரப்பட்டிருந்தால் அவற்றை பாடசாலைக்கு வருவதற்கு முன்னர் பூர்த்தி செய்து கொண்டுவருதல் வேண்டும்.
- வகுப்பாசிரியர் அனுமதியின்றி இடைவேளை தவிர்ந்த நேரங்களில் வகுப்பறையை விட்டு வெளியேறக் கூடாது.
- இடைவேளையின் போது பாடாசாலை வளாகத்தை விட்டு வெளியே செல்லக் கூடாதுமற்றும் ஆசிரியர்கள் இல்லாமல் வகுப்பறைக்குள் செல்லக் கூடாது.
- இடைவேளையின் போது வரிசைக்கிரமமாக நின்று குளிர்பானம் பெற்றுக் கொள்ள வேண்டும். குளிர்பானங்களை அருந்திய பின்னர் 'பிளாஸ்ரிக்' குவளைகளை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் போட வேண்டும்.
- பாடசாலை முடிவடைந்த பின்னர் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இன்றி பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேறக் கூடாது.

## பெற்றோரின் கடமைகள்

- பிள்ளைகளைத் தவறாது பாடசாலைக்கு அனுப்பி வையுங்கள். இது மாணவர்களின் தொடர்ச்சியான அறிவு வளர்ச்சிக்கும் பாடசாலையை ஒரு கட்டமைப்போடு நடாத்துவதற்கும் அவசியமானதொன்று.
- மிக இலகுவான முறையிலும் பிள்ளைகளின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் பிள்ளைகளுடன் தமிழில் உரையாடுங்கள். இது பிள்ளைகளின் மொழிப்பற்றை வளர்ப்பதற்கு உதவுவதுடன் அவர்கள் தமிழ் மொழியை பயில்வதையும் இலகுவாக்கும்.
- அன்றாட தமிழ் பாடசாலை நிகழ்வுகளை பிள்ளைகளிடமிருந்து அறிந்து கொள்ளுங்கள். இதன் மூலம் உங்கள் கவனிப்பையும் தமிழ் மொழியில் உள்ள அக்கறையையும் எடுத்துக்காட்டுவதுடன் பிள்ளைகளை அடுத்த வகுப்பிற்கு தயார் படுத்தவும் (வகுப்பு வேலைகள், நிகழ்ச்சிக்கான பயிற்சிகள்) உதவும்.
- பாடசாலை முடிவடைய 10 நிமிடம் முன்னதாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் பாலர்பள்ளி,ஆரம்ப பள்ளி மற்றும் முன்பள்ளி மாணவர்களை ஆசிரியர்களிடமிருந்து பொறுப்பேற்று செல்ல வேண்டும்.
- மாணவர்களின் பாதுகாப்பை முன்னிட்டு அவர்களை பாடசாலை வளாகத்தினுள் அழைத்து வந்து விட்டுச் செல்லுங்கள்.
- பாடசாலை நிர்வாகத்தின் அனுமதி இன்றி பாடசாலை வேளையில் மாணவர்களை அழைத்துச் செல்லக் கூடாது. மாணவர்கள் 15 நிமிடத்திற்கு மேல் தாமதமாக பாடசாலைக்கு வந்தால் நிர்வாகத்தினரின் அனுமதியைப் பெற்ற பின்னரே வகுப்பறைக்குச் செல்ல வேண்டும்.
- ஒவ்வொரு தவணையின் போதும் குறிப்பிட்ட ஒரு நாளில் மாணவர்களின் பாதுகாப்பை கண்காணிப்பதிலும், குளிர்பானம் வழங்குவதிலும் உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள். உங்கள் கடமை நாள் உங்கள் பிள்ளையின் வகுப்பினால் 'மாணவர் ஒன்றுகூடல்' (Assembly) நடாத்தும் தினமாகும். ஒன்றிற்கு மேற்பட்ட பிள்ளைகள் கற்கும் பட்சத்தில் மூத்த பிள்ளையின் வகுப்பு கருத்திற் கொள்ளப்படும். இது தவிர வருடாந்த நிகழ்வுகளான கலைவிழா மற்றும் பரிசளிப்பு விழா என்பவற்றை ஒழுங்கு செய்வதில் உதவுங்கள்.
- கலை விழாவில் உங்கள் பிள்ளை பங்குபற்றுமிடத்து பயிற்சிகளுக்குத் தவறாது உரிய நேரத்திற்குப் பிள்ளையை அழைத்து வாருங்கள்.
- பாடசாலைச் சுற்றாடலில் வாகனங்களை வீதி நெறி முறைகளுக்கமைய நிறுத்தி வைப்பதோடு உங்கள் நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். குறிப்பாக பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் வாகனப் போக்கு வரத்து அதிகமாக இருப்பதனால் இந்த நேரங்களில் கூடிய கவனம் செலுத்தவும்.

- ஒவ்வொரு பெற்றோரும் தாமாக முன்வந்து செயற்குழுவில் பங்கெடுங்கள், ஒத்துழையுங்கள், கருத்துத் தெரிவியுங்கள், உதவுங்கள். இதனால் பெற்றோருக்குத் தமிழ் பாடசாலையிலுள்ள அக்கறை கண்டு மாணவர்கள் உற்சாகமடைவார்கள்.
- பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் தொடர்பு இலக்கங்கள் அல்லது முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டால் அதனை எமக்கு உடன் அறியத்தரவும்.

## மாணவர்கள் வகுப்பில் தெரிந்து கொள்ள வேண்டியவை, கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள்

### விதிமுறைகள்

1. வணக்கம் சொல்லுதல்
2. தமிழ் மொழி வாழ்த்துப் பாடுதல்
3. பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துதல்
4. பரிசு வாங்கும் போது இரண்டு கைகளாலும் வாங்குதல்
5. வகுப்பில் அமைதியாக இருத்தல்
6. சக மாணவருக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருத்தல்
7. சண்டை பிடிக்காதிருத்தல்
8. பாடசாலைப் பொருட்களைத் தொடாதிருத்தல்
9. பிறர் பொருட்களை தொடாதிருத்தல்
10. பாடசாலைக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருதல்
11. ஆசிரியர் சொல்வதை அவதானமாகக் கேட்டல்
12. பாடசாலையில் தரப்படும் தகவல் குறிப்பை (Information note) பெற்றோரிடம் கையளித்தல்
13. பாடசாலையில் தவிர்க்கப்பட்ட இடங்களுக்கு செல்லாதிருத்தல்
14. ஆசிரியர் இன்றி வகுப்பறைக்குள் செல்லாதிருத்தல்
15. வரிசையில் நின்று குளிர்பானம் பெற்றுக் கொள்ளல்
16. கையடக்கத் தொலைபேசியை வகுப்பில் பயன்படுத்தாதிருத்தல்
17. முடிந்தவரை பாடசாலையில் தமிழில் பேசுதல்

### அறிமுகம் (பெயர்களும்)

1. அதிபர்
2. உபஅதிபர்கள்
3. ஆசிரியர்கள்
4. சக மாணவர்கள்

### பாடசாலை பற்றிய விபரங்கள்

1 பாடசாலையின் பெயர்
2 பாடசாலை நாள்
3 பாடசாலை நேரம்
4 பாடசாலையின் நோக்கம்
5 பாடசாலைக் கீதம்

# DUTY OF CARE POLICY

1) School starts at 2:00 p.m. and finishes at 4:30 p.m. Wentworthville Tamil Study Centre (WTSC) will endeavor to provide adequate care and supervision to students from 5 minutes prior to school start and 5 minutes after school finish (hereafter **school hours** is referred to 1:55 p.m. to 4:35 p.m).

2) It is the parents' or guardians' responsibility to bring their children safely to the school gate and collect their children on time from the school gate before and after school hours respectively. WTSC will **not** take any responsibility for any incidents or accidents that take place outside the school premises before or after the school hours.

3) It is the parents' responsibility to provide emergency contact numbers to the school administration. Parent or Guardian will be notified of accidents or incidents that took place within the school premises during school hours.

4) In classroom student numbers will endeavor to maximum of 20 per teacher to ensure adequate supervision.

5) All students are required to read and understand the code of behaviour.

6) The WTSC Committee will engage minimum of two parent helpers to supervise students on a rotation basis during the following hours:

   - from 1:55 p.m. to 2:00 p.m.;
   - during drink breaks and
   - from 4:30 p.m. to 4:35 p.m.

7) Students are **not** allowed to bring knives, blades, cricket balls, marbles, chewing gumand/or any other item that can cause injury to them and/or others.

8) Students will not be allowed to go outside the school premises during school hours. In case students need to leave the school early, they should obtain permission from the Principal/Vice- Principal.

9) A First Aid Kit will be available at all times in the Tamil School Administration office. An *Accident/Incident Notification Form* is available to be completed, signed and filed. Parent(s) or guardian will be notified as soon as practicable. All accidents or incidents will be reported orally and/or in writing to all concerned.

10) The school will obtain written permission from the parents prior to going on any Excursions, unless the parent(s) or guardian accompany.

11) The committee will make sure that all equipment and classrooms are kept functional and safe to the staffs and students. Students will not be allowed to touch belongings of the mainstream school.

12) Students may be required to come for participation in or practice for functions such as Kalaivizha outside the school hours at venues other than normal school premises. It is the parent's or guardian's responsibility to ensure the safety and welfare of the children during these occasions.

13) The Duty of Care Policy Statement will be made available if requested by parents, guardians, visitors or students during school hours.

# பாடசாலை நாட்காட்டி - 2020

| | திகதி | தமிழ் மொழி வாழ்த்து / பாடசாலைக் கீதம்/ ஒன்றுகூடல் நிகழ்ச்சி | வாரம் | நிகழ்ச்சிகள் / கூட்டங்கள் | போட்டிகள் / மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| தவணை 1 | 26-Jan-20 | | | செயற்குழுத் தலைவர்/அதிபர்/உபஅதிபர்கள்/ஆசிரியர்கள் கலந்துரையாடல் | |
| | 1-Feb-20 | அனைத்து வகுப்புக்களும் | 1 | பாடசாலை ஆரம்பம் | |
| | 8-Feb-20 | 4 கண்ணதாசன் | 2 | | |
| | 15-Feb-20 | 4 பாரதிதாசன் | 3 | | |
| | 22-Feb-20 | 5 கம்பர் | 4 | பெற்றோர்கள்/ செயற்குழு கலந்துரையாடல் (கீழ் வகுப்புக்கள்) | |
| | 29-Feb-20 | 3 வானவில் | 5 | பெற்றோர்கள்/ செயற்குழு கலந்துரையாடல் (மேல் வகுப்புக்கள்) | |
| | 7-Mar-20 | 3 நட்சத்திரம் | 6 | | |
| | 14-Mar-20 | 3 சந்திரன் | 7 | | |
| | 21-Mar-20 | 3 சூரியன் | 8 | | |
| | 28-Mar-20 | 2 தாமரை | 9 | | |
| | 4-Apr-20 | 2 மல்லிகை | 10 | மாணவர்களிற்கு பேச்சுப் போட்டி வழங்குதல் (ஆரம்பப்பள்ளி - ஆண்டு 9) | தவணை-1 மதிப்பீடு |
| | 11-Apr-20<br>18-Apr-20<br>25-Apr-20 | பாடசாலை விடுமுறை | | | |
| தவணை 2 | 2-May-20 | 2 செவ்வரத்தை | 1 | அதிபர்/ உபஅதிபர்கள்/ ஆசிரியர்கள் கலந்துரையாடல் | |
| | 9-May-20 | 9 விபுலானந்தர் | 2 | | பேச்சும் வாய்மொழித் தொடர்பாற்றலும் - போட்டி |
| | 16-May-20 | 2 செவ்வந்தி | 3 | | |
| | 23-May-20 | 7 வீரமாமுனிவர் | 4 | | |
| | 30-May-20 | 8 தனிநாயகம் | 5 | | |
| | 6-Jun-20 | 6 புகழேந்தி | 6 | | |
| | 13-Jun-20 | 1 நீலம் | 7 | | கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை |
| | 20-Jun-20 | 1 சிவப்பு | 8 | | |
| | 27-Jun-20 | 1 மஞ்சள் | 9 | | தவணை-2 மதிப்பீடு |
| | 4-Jul-20 | 1 பச்சை | 10 | | மாணவர் அறிக்கை |
| | 11-Jul-20<br>18-Jul-20 | பாடசாலை விடுமுறை | | | |
| தவணை 3 | 25-Jul-20 | புகுநிலை வகுப்பு - ஔவை | 1 | அதிபர்/ உபஅதிபர்கள்/ ஆசிரியர்கள் கலந்துரையாடல் | |
| | 1-Aug-20 | ஆரம்பப்பள்ளி – அன்னம் | 2 | | |
| | 8-Aug-20 | ஆரம்பப்பள்ளி – குயில் | 3 | | |
| | 15-Aug-20 | ஆரம்பப்பள்ளி – வாத்து | 4 | வகுப்பு புகைப்படம் எடுத்தல் **(Photo day)** | |
| | 22-Aug-20 | ஆரம்பப்பள்ளி – புறா | 5 | | |
| | 29-Aug-20 | 9 (HSC) – நக்கீரர் | 6 | | |
| | 5-Sep-20 | 10 பரிமேலழகர் | 7 | | |
| | 12-Sep-20 | | 8 | கலைவிழா | |
| | 19-Sep-20 | பாலர் பள்ளி - அமுதம் | 9 | | |
| | 26-Sep-20 | பாலர் பள்ளி - மஞ்சரி | 10 | | தவணை-3 மதிப்பீடு |
| | 3-Oct-20<br>10-Oct-20 | பாடசாலை விடுமுறை | | | |
| தவணை 4 | 17-Oct-20 | 12 அகத்தியர் | 1 | அதிபர்/ உபஅதிபர்கள்/ ஆசிரியர்கள் கலந்துரையாடல் | ஆண்டு 12 பட்டமளிப்பு |
| | 24-Oct-20 | இணைப்பு வகுப்பு - நாவலர் | 2 | | தமிழ் அறிவுப் போட்டி |
| | 31-Oct-20 | முன்பள்ளி – கிளி | 3 | | |
| | 7-Nov-20 | முன்பள்ளி – மயில் | 4 | | |
| | 14-Nov-20 | முன்பள்ளி – மான் | 5 | | |
| | 21-Nov-20 | முன்பள்ளி – முயல் | 6 | | தவணை-4 மதிப்பீடு |
| | 28-Nov-20 | 11 தொல்காப்பியர் | 7 | | |
| | 5-Dec-20 | இணைப்பு வகுப்பு - பாரதி | 8 | HSC தகவல் தினம் (HSC Information session) | |
| | 12-Dec-20 | | 9 | பரிசளிப்பும் இராப்போசனமும் | |
| | 19-Dec-20 | 5 கபிலர் | 10 | இறுதி நாள் நிகழ்ச்சிகள். நிர்வாகிகள் ஆசிரியர்கள் ஒன்றுகூடல் (தேநீர் விருந்து) | மாணவர் அறிக்கை, களியாட்ட நாள் |